ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2460/04 - 2025 ඔක්තෝබර් මස 28 වැනි අඟහරුවාදා - 2025.10.28

2460/04 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DSK/LND/7/F1/12/ACQ/535.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**
**F.V.P.152 (மேலதிக இல. 52)**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவில் வல்கம்முல்ல கிராமத்தில் அமைந்துள்ளது.

1. துண்டு இல. 1623

காணியின் பெயர்: மஹாவத்தஹேனா; விபரம்: ஒரு தோட்டம், பலா, தென்னை கொண்ட கலப்பு பயிர் தோட்டம் மற்றும் ஒரு நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி உள்ளது; விஸ்தீரணம்: 02 ஏக்கர்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு தை மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுவன பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடைமைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆண்டு தை மாதம் 21ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர். ஏ. சதுரி தமித்ரா,
பிரதேச செயலாளர்,
கட்டுவன.

பிரதேச செயலகம்,
கட்டுவன,
2025, ஒற்றோபர் 16.

EOG 10 - 0244

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: என்சிபி/எச்ஜி/எல்02/462.
காணி அமைச்சின் இல.: 03 ஜே/80/டபிள்யூஎஸ்/498.

மேற்கண்ட தலைப்பின் கீழ் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு 1631/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்த மானியின் கீழ் 2009, திசெம்பர் 10 ஆந் திகதியன்று 12-781 ஆம் இலக்கத்தின் கீழ் என்னால் வெளியிடப் பட்டது மற்றும் 2010, யூலை 28 ஆந் திகதிய 1664/15 ஆம் இலக்க வர்த்தமானியின் கீழ் இல. 08 - 254 இன் கீழ் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட திகதிகளை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் திகதிகளை மாற்றி திருத்தப் படுகின்றது என்பதை இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

| நீக்கப்படவேண்டிய திகதிகள் | நீக்கப்பட வேண்டிய திகதிகள் மற்றும் மாற்றப்பட வேண்டிய திகதி |
|---|---|
| 2010, ஓகத்து 25 | 2025, நவெம்பர் 25 |
| 2010, ஓகத்து 18 | 2025, நவெம்பர் 18 |

ஆர். ஐ. பி. சந்தியா பீ. ரத்னமலல,
பிரதேச செயலாளர்,
ஹிங்குராக்கொட.

பிரதேச செயலகம்,
ஹிங்குராக்கொட,
2025, ஒற்றோபர் 24.

EOG 10 - 0245

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 3/2/3/10/276.
காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/7/2019/எச்டபிள்யூ/186.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 17.11.2021 ஆந் திகதிய 2254/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பக்கம் 15ஏ இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் நிட்டம்புவ - பஸ்யால வீதித் திட்டத்தின் கீழ் காணி எடுக்கப்படுகின்றது. கடத்திரல் வரைபட இல. 510607, வலய இல. 01, தாள் இல. 16 இல் துண்டு இலக்கங்கள் 503 மற்றும் 505 பிரிக்கப்பட்டு, கடத்திரல் வரைபட இல. 510607, வலய இல. 01, தாள் இல. 24 இல் துண்டு இலக்கங்கள் 01, 02, 03 என பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: தொறகடகும்புர; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடங்கள் 03 இன் பகுதிகள் காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சார்லஸ் டீ சில்வா, இல. 48/1, கண்டி வீதி, நிட்டம்புவ; விஸ்தீரணம்: 0.0032 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர்: தொறகடகும்புர; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: முஹாந்திரம்லாகே செலீன் பார்த மார்லீன், இல. 48/1, கண்டி வீதி, நிட்டம்புவ; விஸ்தீரணம்: 0.0007 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 03**

காணியின் பெயர்: தொறகடகும்புர; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி மற்றும் தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி என்பன காணப்படு கின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: விஜேரத்ன முஹாந்திரம்லாகே இந்ராணி

நிரஞ்ஜனி விஜேரத்ன; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

எஸ். பீ. குணவர்த்தன,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
அத்தனகல்ல.

பிரதேச செயலகம்,
அத்தனகல்ல,
2025, ஒற்றோபர் 10.

EOG 10 - 0246

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 3/2/3/10/276.
காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/7/2019/எச்டபிள்யூ/186.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு 17.11.2021 ஆந் திகதிய 2254/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பக்கம் 15ஏ இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் நிட்டம்புவ - பஸ்யால வீதித் திட்டத்தின் கீழ் காணி எடுக்கப்படுகின்றது. கடத்திரல் வரைபட இல. 510600, வலய இல. 03, தாள் இல. 08 இல் துண்டு இல. 398 பிரிக்கப்பட்டு, கடத்திரல் வரைபட இல. 510600, வலய இல. 03, தாள் இல. 11 இல் துண்டு இலக்கங்கள் 01, 04, 05, 06 என பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஹபாலியத்தே கும்புர பீல்லாவ மற்றும் பாரே பீல்லாவ; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடங்கள் 02 இன் பகுதிகள் மற்றும் தற்காலிகக் கட்டிடங்கள் 02 இன் பகுதிகள் என்பன காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சிங்கப்புலிகே சோமரத்ன, இல. 24/7, அளுபோகஹலந்த மாவத்தை, பண்டாரவத்தை, கம்பஹா; விஸ்தீரணம்: 0.0117 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 04**

காணியின் பெயர்: ஹபாலியத்தே கும்புர பீல்லாவ மற்றும் பாரே பீல்லாவ; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சிங்கப் புலிகே சோமரத்ன, இல. 24/7, அளுபோகஹலந்த மாவத்தை, பண்டாரவத்தை, கம்பஹா; விஸ்தீரணம்: 0.0004 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 05**

காணியின் பெயர்: ஹபாலியத்தே கும்புர பீல்லாவ மற்றும் பாரே பீல்லாவ; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சிங்கப் புலிகே சோமரத்ன, இல. 24/7, அளுபோகஹலந்த மாவத்தை, பண்டாரவத்தை, கம்பஹா; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 06**

காணியின் பெயர்: ஹபாலியத்தே கும்புர பீல்லாவ மற்றும் பாரே பீல்லாவ; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காலஞ் சென்ற ஹேவா ரன்துனுகே சுனில், இல.157/B, கலால்பிட்டிய, பஸ்யால; விஸ்தீரணம்: 0.0016 ஹெக்டயார்.

எஸ். பீ. குணவர்த்தன,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
அத்தனகல்ல.

பிரதேச செயலகம்,
அத்தனகல்ல,
2025, ஒற்றோபர் 10.

EOG 10 - 0247

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.